www.padippakam.com

# செய்திக்கோவை

நடுவம் 10

01-06-85 — 30-06-85

மேன்மையே இல்லாத
மேலதிகாரிகளின் —
ஏவல்களுக்குக் காத்திருக்கும்
ஏவல் நாய்கள்;
குடிசை மறைவுகளில்
மானிடச் சதையை வதைக்கும்!
ஊமை விழிகள்
உகுக்கும் கண்ணீர்
அருவி —
கொடூரத்தின் கண்களை
அடைத்தே தீரும்!



## புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்!

படிப்பகம்

www.padippakam.com



* திருகோணமலை இச்சவெளியில் உள்ள பொலிஸ் நிலையமும் கடற்படை முகாம் ஒன்றும் தமிழீழப் போராளிகளால் தாக்கப்பட்டுள்ளது. அத்துடன் இச்சவெளிப் பகுதியில் உள்ள சிறீலங்கா மேற்கு ஜேர்மனியின் கீழ் இயங்கும் வானொலி நிலையமும் தாக்கப்பட்டு பல கருவிகளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. ௨-06-85

* மூதூர் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பல அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, இவர்களின் சடலங்கள் திருமலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ௨-06-85

* நயினாதீவுப் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் மேற்கொண்ட வெறியாட்டங்களைத் தொடர்ந்து 1000 ற்கு மேற்பட்ட மக்கள் வேலணைப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். 0௨-06-85

* திருகோணமலைக்கருகில் தான்கிளமருகில் தமிழ்ப் பயணிகளுடன் வந்த பஸ் வண்டியை வழிமறித்த சிங்கள காடையர்கள் 17 தமிழர்களை கொன்று குவித்துள்ளனர். மேலும் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் திருமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மீதிப் பேர் காட்டிற்குள் தப்பியோடியுள்ளனர். 0௨-06-85

* திருகோணமலைப் பகுதியில் சிங்கள கூலிப்படைகள் நடத்திவரும் அட்டகாசங்களைத் தொடர்ந்து ௨3 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் ௨00ற்கும் அதிகமானோர் கோயில்களிலும் பாடசாலைகளிலும் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். ௨-06-85

* மலைநாட்டுப் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு ஒன்றினால் 1௨ பேர் கொல்லப்பட்டுள்ளனர். ௨-6-85

* திருகோணமலையில் உள்ள 5 தமிழ் கிராமங்களில் சிங்கள இராணுவத்தின் உதவியுடன் வந்த சிங்கள காடையர்கள் 80ற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை சுட்டுக்கொன்றுள்ளனர். மேலும் 6000ற்கும் மேற்பட்ட மக்கள் மூதூர், சம்பூர், தோப்பூர் ஆகிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளிலும் கோயில்களிலும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். அத்துடன் 11,000ற்கும் மேற்ப-

படிப்பகம்

www.padippakam.com



-பட்ட மக்கள் காடுகளில் ஒளி-ந்துள்ளனர். 05-06-85.

*சிறிலங்காவில் புதிய தீவிரவாதத்தடுப்பு சட்டத்தை கொண்டுவர சிறிலங்கா அரசு முடிவு செய்திருப்பதாகவும், இதன் மூலம் தீவிரவாத இளைஞர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும் என ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ் கூறியுள்ளார். 05-06-85.

* புன்னாலைக்கட்டுவனில் வைத்துக் கடத்தப்பட்ட மில் உரிமையாளர் இராசரத்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார். 06-06-85

*திருமலையில் 8 தமிழர்கள் சிங்கள காடையர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் 200க்கும் மேற்பட்ட தமிழர்களை காணவில்லை என்றும் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. 06-06-85

*திருகோணமலையில் கிளிவெட்டி கிராமமும், மேலும் 3 கிராமங்களும் சிங்கள காடையர்களினால் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன் 100க்கும் மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 07-06-85.

* செட்டிகுளத்திற்கு அருகாமையில் உள்ள கிராமம் ஒன்றில் சிங்கள ஊர்காவல்படையினர் கொண்டு சென்ற ஆயுதங்கள் தமிழீழப்போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. 7-06-85

* தமிழீழப் போராளிகள் 3மாதகாலத்திற்கு ஆயுதங்களை கீழே போட வேண்டும் என J.R கூறியுள்ளதை தொடர்ந்து மதுரையில் வைத்து பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டியளித்த தமிழீழ மக்கள் விடுதலைக்கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன், தமிழீழ விடுதலைக்காக நாம் ஏந்திய ஆயுதங்களை எக்காரணம் கொண்டும் கீழே போட முடியாது எனக் கூறியுள்ளார். 8-06-85

* திருகோணமலைக்கு செல்லும் மூன்று பாலங்கள் தமிழீழப்போராளிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. 8-6-85

* கொழும்பைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் தம்பையா என்பவர் தீவிரவாதக் குழுக்களுக்கு வெளிநாடுகளில் ஆயுதங்கள் வாங்க உதவியளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறிலங்கா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 8-06-85

படிப்பகம்

www.padippakam.com



* யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்ற பஸ்வண்டி ஒன்று இறாகலவில் வழிமறிக்கப்பட்டு பிரயாணிகள் சிங்கள காடையர்களினால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளனர். 08-06-85.

* இலங்கையில் வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும், தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசியல் திட்டம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும், இப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் எனவும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார். 8-6-85

* மூதூர் மாவட்டத்தில் இருந்து 12 மைல் தொலைவில் உள்ள தெய்வத்தை என்ற கிராமத்தை, இனம்தெரியாத குழுவொன்று தாக்கியதைத் தொடர்ந்து 14 சிங்களமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் "பட்டித்திடல்" கிராமத்தில் அவசர சிகிச்சைக்காக டாக்டர் ஒருவரை அழைத்துச் சென்ற வாகனமொன்று தமிழீழப் போராளிகளால் வைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிக்கு இலக்காகி சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 11-06-85

* பூசா தடுப்பு முகாமில் இருந்து 60 தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டு வவுனியாவில் சேர்க்கப்பட்டுள்ளனர். 13-06-85

* யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னை வந்து தங்கியிருந்த யாழ் சிற்றேடுகளின் உரிமையாளர், அவரது மனைவி, மாமி, ஐந்து பிள்ளைகள், பணிப்பெண் ஆகியோர் சென்னையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். 13-06-85

* திருநகர்ப் பகுதியில் ஏற்பட்ட கண்ணிவெடிப்பொன்றைத் தொடர்ந்து அவ்விடத்தைச் சேர்ந்த அருள்நாயகம் என்பவர் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர். 14-06-85

* திருகோணமலை மாவட்டத்தில் பட்டித்திடல் என்ற கிராமத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து 40 தமிழர்கள் சிங்களக் காடையர்களினால் கொல்லப்பட்டுள்ளனர். 14-06-85

> மக்கள் தங்கள் உரிமைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் அவர்களை எந்தவொரு அடக்குமுறையும் எந்தவொரு தாக்குதலும் அழித்துவிட முடியாது. —காஸ்ரோ

படிப்பகம்

www.padippakam.com



* திருகோணமலைப்பகுதியில் சிங்கள இராணுவம் மற்றும் காடையர்களின் அட்டகாசத்தினால் பயந்து சம்பூர், கொட்டியாதீவு, கட்டைபறிச்சான் ஆகிய காட்டுப்பகுதியில், மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் பசியாலும் தொற்று நோய்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் அக்காட்டுப் பகுதியில் நுழைந்த சிங்களக் காடையர்கள் இரண்டு பெண்கள் உட்பட 35 பேரை கொன்றுள்ளார்கள். 16-06-85

* கடந்த வாரம் திருகோணமலைக்கு வந்த பஸ்வண்டி ஒன்றில் இருந்து 6 தமிழர்கள் சிங்களக் காடையர்களினால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்கள். மேலும் திருமலை மாவட்டத்தில் அகதிகள் முகாம்களில் உள்ள 40 வயதுக்கு குறைவான தமிழர்கள் சிங்கள இராணுவ முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர். 16-06-85

* நேற்று முன்தினம் வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையிலான 90 அடி நீளமான புகையிரதப்பாலமும் மதகு ஒன்றும் தீவிரவாதிகளினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.
16-06-85

* போர் நிறுத்தத்திற்கு தயாரென்று சிங்கள அரசு கூறிய போதிலும் சமீபகாலமாக சிங்கள இராணுவம் தொடர்ந்தும் தமிழ்மக்களைக் கொன்று குவிக்கின்றது என சர்வதேச கருணா ஸ்தாபனம் குற்றம் சாட்டியுள்ளது. 17-06-85

* வடபகுதியில் சிங்கள இராணுவம் அத்துமீறல் செயல்களில் ஈடுபட்டுள்ளது என்பதை லலித் அத்துலத்முதலி ஒத்துக்கொண்டதுடன் இதுவரையில் அத்துமீறி நடந்த 700 இராணுவத்தினர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளார்கள். 17-06-85

* இராமேஸ்வரம் பகுதியின் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக அப்பகுதிக்கு கூடுதல் கடற்படைக் கப்பல்கள் அனுப்பப்படும் என இந்தியக் கிழக்குப்பிராந்திய கடற்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.
17-06-85

* கடந்த 03-06-85 அன்று 6.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் விசாரணையின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல தமிழ் இளைஞர்கள் சிங்கள இராணுவத்தினால் சித்திரவதை செய்யப்பட்ட பின்பு தார்ப்பீப்பாக்களிற்குள் போட்டு எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 18-06-85

படிப்பகம்

www.padippakam.com


இரு இனங்களுக்கும் இடையில் நடந்த மோதலில் 35 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன் ஓமந்தையில் வைத்து புகையிரதப்பாதை தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதிக்கான உணவு விநியோகமும், எரிபொருள் விநியோகமும் தடைபட்டுள்ளது எனவும் மீண்டும் புகையிரத சேவை வவுனியாவரையுமே நடைபெறும் எனவும் சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

இந்திய இராணுவத்தை அனுப்பி இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வு காணும்படி கோரி, ஆர்ப்பாட்டம் செய்யும் போது கைது செய்யப்பட்ட தமிழக முன்னைநாள் அமைச்சர் S.T. சோமசுந்தரம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

20-06-85

கடந்த 15-06-85 அன்று மன்னாரில் உள்ள கிராமமொன்றில் புகுந்த சிங்கள இராணுவத்தினர், அங்கிருந்த 15 தமிழ் அகதிகளுக்கு பலாத்கா-சித்திரவதை செய்யப்பட்டு பின்பு தார்ப்பீப்பாக்களிற்குள் போட்டு எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

19-06-1985.

இலங்கை இராணுவத்தை அடக்கி வைக்கும்படி J.R ஐ பிரதமர் இராஜீவ் காந்தி கேட்டுள்ளதாகவும், இதற்கிடையில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர், J.R, அத்துலத்முதலி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் செய்திகள் அறிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து சென்னையில் 1000 எழுத்தாளர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

கடந்த 17-06-85 அன்று கிளிநொச்சியில், தமிழர்களுக்கு சொந்தமான 3 வீடுகள் சிங்கள இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

21-06-85

நேற்று முன்தினம் பொத்துவில் பகுதியில் இராணுவத்தடுப்பை மீறிச்

படிப்பகம்

www.padippakam.com



ந்துள்ளார். ௨௧-06-1985

* என்று ஆயுதங்களை தூக்கினோமோ அன்றே புரட்சி ஆரம்பமானது, என்று ஆயுதத்தினைக் கீழே போடுகின்றோமோ அன்றே புரட்சி முடிவடையும் இவ்வாறு கழகச் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் வீரகேசரிக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ மக்களின் முழுமையான விடுதலையே எமது நியாய நோக்கமாகும். ௨௧-06-85

* சவூதி அரேபியாவில் வேலை செய்து வந்த இலங்கையைச் சேர்ந்த ௨500 பேரை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்போவதாகவும், இதற்கான காரணம் என்னவென்று இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது. அத்துடன் கொழும்பில் இஸ்ரேல் நாட்டிற்கு தூதரகப் பிரதிநிதித்துவம் அளிப்பது என இலங்கை அரசு முடிவு செய்துள்ளதை அடுத்து சவூதி அரேபியா உட்பட பல அரபு நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன. மேலும் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக இருந்த நீர்ப்பாசனத்திட்டம் ஒன்றிற்கான உதவியும் சவூதி அரேபியா அரசினால் இடைநிறுத்தம் செய்யப்ப-
டவுள்ளதாகவும் அறிவிப்

டுகிறது. ௨௨-06-1985

* ஜயவர்த்தனா அரசு நடாத்திய வட்டமேசை மகாநாடு தோல்வியுற்றது போல், போர்நிறுத்த இடைக்காலத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசு தனது படையை பலப்படுத்திக் கொண்டு இறுதிக் கட்டத்தாக்குதல்களை தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படலாம் எனவும் தமிழர் பிரச்சனை குறித்து எந்த முடிவானாலும் ஆழ்ந்து சிந்தித்து எடுக்கவேண்டும் என தி.மு.க தலைவர் கருணாநிதி தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். ௨௨-06-85

* பாதுகாப்பு வலயம் என இலங்கை அரசு பிரகடனப்படுத்திய பகுதிகளின் சில வீதிகளில் வாகனங்களின் நடமாட்டம் அனுமதிக்கப்படுவதாகவும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இராணுவ முகாம்கள் நீடிக்கும் என்றும், தேவைப்படும் இடங்களில் பாதுகாப்பு படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார், ௨3-6-85

* வடமாகாணத்திற்கு உயர் அதிகாரங்கள் வழங்க இலங்கை அரசு முயற்சிப்பினும், அதன் எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தது.

படிப்பகம்

www.padippakam.com



கீகிம் என இந்தியப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. மேலும் பிரதமர் ரஜீவ்காந்தியின் வேண்டுகோளை சிறீமா ஏற்பாரா என தெரியவில்லை எனவும் பத்திரிகை தெரிவித்துள்ளது. 23-06-85.

* இன்று பூநகரி இராணுவமுகாமில் இருந்து வந்து கொண்டிருந்த சிங்கள இராணுவ வாகனம் ஒன்றை ஜீப்வண்டி ஒன்றில் வந்த தீவிரவாத இளைஞர்கள் தாக்கியுள்ளதாக சிறீலங்கா வானொலி கூறியுள்ளது.
24-06-85

* தனித் தமிழ் ஈழக்கோரிக்கை கைவிடப்படாத பட்சத்தில் எந்தரு முடிவுக்கும் நாம் அனுமதிக்கமாட்டோம் என்றும் இவ்வருட இறுதிக்குள் தமிழர்பிரச்சனைக்கு ஒரு தீர்வு தீட்டப்படும் எனவும் J.R கூறியுள்ளார். அத்துடன் காணப்படும் தீர்வு எதுவாக இருந்தாலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.
24-06-85

* யாழ் நூல்நிலையத்திற்கு, தமிழ்நாடு அரசு 3 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. 25-06-85

* இராமேஸ்வரத்திற்கு இதுவரை அகதிகளாக வந்த தமிழர்களில் 70 சதவீதமானோர், தமிழ் நாட்டின் பல பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். 25-06-85

* இலங்கையில் தீவிரவாத இளைஞர்கள் போர்நிறுத்தத்திற்கு மறுத்தால், உடனடியாக இந்திய அரசிற்கு அறிவிக்கப்படும் என லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார். அதேவேளை தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தீவிரவாத கிளை இப்போர் நிறுத்தத்திற்கு உடன்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். 26-06-85

* இந்தியாவில் மண்டபம் அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளை, இந்திய உள்துறை அமைச்சர் திரு.சவான் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்ததுடன் இது குறித்து முதல்வர் M.G. இராமச்சந்திரனுடன் ஆலோசனை நடத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

* மட்டக்களப்பு ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் மாலா இராமச்சந்திரன் கொலை சம்பந்தமாக நீதிமன்ற விசாரணையில்

படிப்பகம்

www.padippakam.com



சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட ஒரு தமிழ் இளைஞர்கள் இது J.R இன் நீதிமன்றம் இங்கு நாம் சாட்சியளிக்க முடியாது என்றும் வீரத்துடன் மறுத்ததை அடுத்து, மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். 26-06-85

* யாழ் ST. JOHNS கல்லூரி அதிபர் மதிப்புக்குரிய திரு. C.E. ஆனந்தராஜா அவர்கள் நேற்று முன்தினம் இனந் கொலைப்படை ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழ் மாணவர்களுக்குமிடையே, கிரிக்கெற் பந்தயத்தினை ஏற்படுத்திக் கொடுத்தார் என குற்றம் காட்டப்பட்டு, பல முறை எச்சரிக்கப்பட்டிருந்தார் எனவும் தெரியவருகிறது. 27-06-85

* இந்திய மத்திய அரசு இன்னமும் தமிழீழப் போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்றும், போராளிகள் விரும்பினால், மத்திய அரசு பேசத் தயாராக உள்ளது என்றும் இந்திய உள்துறை அமைச்சர் சவான் நேற்று தெரிவித்துள்ளார். 28-06-85.

* கிளிவெட்டி, முல்லைத்தீவு பகுதிகளில் குடியிருக்கச் சென்ற தமிழர்கள் சிங்கள இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்படுவதாகவும், வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, தாளையடி ஆகிய பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள், சிங்கள இராணுவத்தினரால் தாக்கப்படுவதாகவும், திருமலை மாவட்டத்தில் இன்னமும் பதட்டநிலை காணப்படுவதாகவும் அறியப்படுகிறது. 28-06-85

* யாழ் பொதுஸ்தாபனங்கள், மக்கள் அமைப்புக்கள் ஆகியவற்றின் வேண்டுகோளிற்கிணங்க, காலஞ் சென்ற ST. JOHNS கல்லூரி அதிபர் திரு. ஆனந்தராஜா அவர்களின் இறுதிச் சடங்குகளின் பின்னிட்டு யாழ் மாவட்ட அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படும் என வட மாநிலக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். மேலும் இவரைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு சிங்கள அரசினால் 6 இலட்சரூபா சன்மானம் வழங்கப்படும் எனவும் இவரது சடலத்தைப் படம் பிடித்துக் கொண்டிருந்த 3 படப் பிடிப்பாளர்கள் இனம் தெரி-

படிப்பகம்

www.padippakam.com



-யாழ் நகரினில் நடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள் எனவும் சிங்கள வானொலி அறிவித்துள்ளது.

திறமையும் வீரமுமிக்க இந்த இளைஞர்கள் தண்டிக்கப்படுவது சாதாரணமானதுதான். ஆனால் நாளை இதே சர்வாதிகாரியும் அவரது அடிவருடிகளும் மக்களால் தீர்ப்பளிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி. — காஸ்ரோ

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு:

20-03-1939



உதிர்வு:

07-06-1985

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் தன்னை முழு நேரப் போராளியாக அர்ப்பணித்து கடந்த மாசி மாதம் வீரமரணம் அடைந்த சின்னமணி என அழைக்கப்படும் தோழர் சுதாகரனின் தகப்பனாரான, தோழர் கோபாலசிங்கம் அவர்களின் மறைவையொட்டி, தோழருக்கு கண்ணீர் அஞ்சலியையும் அவரின் குடும்பத்தவர்களிற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தெரிவிக்கின்றது.

## T.E.I.B

## 24 மணிநேர சேவை 24 HOURS SERVICE

FOR RECORDED MESSAGES, PLEASE RING

THAMIL - 01 470 6270 === ENGLISH - 01 552 5970.

Published by: Thamileelam Information Bureau, BM Box 1916, London WC1N 3XX

படிப்பகம்